2002 ஏப்ரல் 22]

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்ற வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, சூழ்நிலைக்கு ஏற்ப நமது சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

193—

ஒப்பந்தத் தொழிலாளர்கள்

***9075—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், எண்ணூர் அனல் மின் நிலையத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சுமார் 1,200 பேர் மின் வாரியத்தில் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பணி நிறுத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை மீண்டும் பணியமர்த்துவது தொடர்பாக தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளன. நிலுவையில் உள்ள மேற்படி மேல்முறையீடு வழக்கின் தீர்ப்பிற்கேற்ப இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த

1998 ஆம் ஆண்டு திருவொற்றியூரில் உள்ள எண்ணூர் அனல் மின்நிலையத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சீனியாரிட்டி அடிப்படையிலே 647 நபர்களை, 1998 மே மாதம் 4 ஆம் தேதி பணியில் அமர்த்தினார்கள். ஆனால் அவற்றிலும், தி.மு.க. ஆட்சியின் குளறுபடிகள் காரணமாக, அந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே 6 மாதங்கள் பணிபுரிந்த அந்தத் தொழிலாளர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். இதனால் அந்தக் குடும்பங்கள் இன்று வரையிலும் மிகக் கடுமையான வகையிலே பாதிக்கப்பட்டு, பசி, பட்டினியோடு சாகின்ற நிலைமை உள்ளது. அவற்றிலே 12 நபர்கள் இதுவரையில் மரணம் அடைந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்து, தொழிலாளர்களின் குறைகளைப் போக்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டி, மின்சார வாரியத்திலே அவர்களை மீண்டும் பணியமர்த்தித் தருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதோடு மட்டுமல்லாமல்-- 647 தொழிலாளர்கள் தவிர்த்து மீதமுள்ள தொழிலாளர்களையும் பணியமர்த்துவதற்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து, வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதன் காரணமாக, வழக்கு முடிந்த பிறகு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 194, திரு. க. பாரமலை, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

194—

ஊதியம் வழங்குதல்

***6056—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—